MAHAMAHOPADHYAYA DR. U.V. SWAMINATHAIYER LIBRARY

Registered No. M. 925.

# செந்தமிழ்ச் செல்வி.

திரிசிரபுரத்து மாதந்தோறும் வெளிவரும்.

ஒரு தமிழ்ப் பத்திரிகை.

செல்வத்துட் செல்வம் செவிச்செல்வ மச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை.

தொகுதி 1.] விரோதிகிருது-ஞு வைகாசி-மீ 7-உ [பகுதி-3

உள்ளுறை.


| | | பக்கம் |
|---|---|---|
| ஐந்தாவது ஜார்ஜ்மன்னரின் முடிசூட்டுத்திருவிழா | பத்திராதிபர். | 49 |
| மகுடாபிஷேக வாழ்த்துக் கவிகள் | ,, | 51 |
| நம்மவர் பாலேயர் வேண்டுகோள் | பொதுநலப் பிரியன் | 54 |
| எரிமலை. | மகா-௱-௱-ஸ்ரீ R. இராமய்யா | 56 |
| கம்பராமாயணச் செய்யுளாராய்ச்சி | ,, குரு. சுப்பிரமணிய ஐயர் | 59 |
| முயற்சி. | ,, ஜெ. எஸ். நரசிம்மலுநாயுடு | 62 |
| நம்நாட்டுப்பெண்மணிகளின் தற்கால நிலைமை. | ஸ்ரீமதி அ. சுப்பம்மாள். | 67 |
| திரிசிரபுரத்துத் தமிழ்ச்சங்கங்கள். | தமிழார்வலன் | 70 |
| புத்தகவரவுகள். | பத்திராதிபர் | 72 |


பத்திராதிபர்:— பண்டிதர், அமிர்தம். சுந்தரநாதபிள்ளை,
திரிசிரபுரம்

வருஷசந்தா ரூ 1. தபாற்கூலி அணா 4 | Copy Right Registered. | வெளிநாட்டுக்கு ரூ. 2 தனிசஞ்சிகை அணா 2

ஸ்ரீ கிருஷ்ணவிலாஸ பிரஸ், திருச்சி.

விளம்பர விகிதம் பக்கம் ஒன்றுக்கு ரூ. 1—8—0

உ

# செந்தமிழ்ச் செல்வம்.

## ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி-1 ] விரோதிகிருது-௵ ஆனி-௴ 1-உ. [பகுதி. 3

### ஐந்தாவது ஜார்ஜ் மன்னரின் முடிசூட்டற் றிருவிழா.

தண்கடல் சூழ்ந்த தரையெல்லாந் தன்னடிக்கீழொதுங்க அன்பொடும் அருளோடும் மன்னுயிரெல்லாந் தன்னுயிர்போல நினைத்துக் காத்துவந்த காலஞ்சென்ற அன்னை குவீன் விக்டோரியா சக்ரவர்த்தினி அம்மாளைப்பற்றிப் புகழாதார் யார்? உலகுக்கே ஒருதாயென இருந்து எவருந்துதிக்க நெடுங்காலம் அரசாட்சி செய்து பூமியுள்ளவரை தன் பேரை நாட்டிக் கடவுளிற் கலந்தார்கள். அவர் பிரிவு ஆற்றாது நாம் பட்ட பாடு நமக்கே ஞாபகமிருக்கும். எத்தனை காலங்கழித்தாலும் ஜன்மங்கள் உண்டென்போரின் அபிப்பிராயப்படி எத்தனை ஜன்மங்களெடுத்தாலும் இவ் அம்மையாரை மறப்பேமோ? மறவேம்! மறவேம்!

பிறகு சக்கிரவர்த்தினியாரின் திருப்புதல்வராகிய ஏழாவது எட்வர்டு என்னும் நமது காலஞ்சென்ற சக்ரவர்த்தியார் முடிசூடித் தன் தாய்போலவே நெடுநில முழுதுங்காத்துச் சீக்கிரத்தே நம்மைவிட்டுப் பொன்னுலகரசை விரும்பிச் சென்றனர். நமது அதிட்டம் எட்வர்டு சக்ரவர்த்தியாரின் தண்ணிழலில் நெடுங்காலமிருந்து இன்புறுதற்கில்லாது போயிற்று. இப்பொழுது காலஞ்சென்ற மெது சக்ரவர்த்தியாகிய ஏழாவது எட்வர்டு மன்னரின் மகனாராகிய ஐந்தாவது ஜார்ஜ் அரசர் தந்தையின் பாரத்தை ஏற்று நடத்திவந்தாலும் உண்மையில் முடிசூடி இங்கிலாந்துக்கு மன்னரென ஆதல் நிகழும் ஜூன் மாதம் 22-ந்தேதி

யாகிய பொன்னுளென்னும் நன்னாளே. நமது நாடு எந்த நாட்டினுங் குருபக்திக்கும் இராஜ விசுவாசத்திற்குஞ் சிறந்து விளங்கும் நாடு. சில ரறியாதாராகி நம்மை ராஜவிசுவாச மற்றவரென்பர் அவர் அறிவில் வறியரே.

"முறை செய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்'' (திருக்குறள்.)

பொழிப்பு:— (தான் முறை செய்து பிறர் வருந்தாமற் காத்தலைச் செய் யுமரசனானவன் பிறவியினாலே மனிதனேயாயினும் மனிதர்களுக்குச் செயலினாலே கடவுளென்று வேறு வைக்கப்படுவன்.)

என்றிது கருதி நமக்கு அரசனே தாயுந்தந்தையுந் தெய்வமுமெனக் கொண்டுள்ள நமக்கு இது ஒரு பெருங்களிப்பைத் தருவதாகும். இன் னும் நமது இங்கிலாந்து மன்னரும் நமது இந்தியாவுக்குச் சக்கிரவர்த்தி யுமாகிய ஜார்ஜ் மன்னர் சில மாதஞ் சென்ற பின்னர் இந்தியாவின் பிர தானமாகிய டில்லிக்கு வந்து அங்கு இந்தியாவிற்குச் சக்ரவர்த்தி என் னும் மகுடஞ் சூட்டிக்கொள்ளப் போகின்றார். அது இதனினும் நமக்கு மிகக் களிப்பைத் தருவதாகும்.

இதுபோலும் ஆங்கிலவரசர் இந்தியாவில் வந்து முடிசூடிக்கொண் டது இல்லை. இதுவே முதன்முறையான பெருஞ்சம்பவம். இத்திரு விழா இந்தியாவில் நடக்க நாமெல்லோருங் கண்குளிரக்காண என்ன தவஞ்செய்தோமோ? அறியோம்! இப்பெரும் பேறு பெற்றோம்! பெற்றோம்!!

நமது சக்ரவர்த்தியார் இந்தியாவிற்குப் பலமுறை வந்து குறை களைத் தெரிந்தும் நம்மவர்களுடன் ஒட்டி உணர்ந்தும் நமது குறைகளை நீக்கக் கங்கணம் பூண்டவராதலாலும் இவருடைய அரசாட்சியில் முன் னர் நாம் பெற்றுள்ள பெரும்பெரும் பயன்களைவிட இன்னும் பலபல பெரும்பயன்களைப் பெறுவோமென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை.

நமது சக்ரவர்த்தியாராகிய ஐந்தாவது ஜார்ஜ் மன்னரும் அவர் பத் தினியாராகிய அரசி குவீன் மேரிஆவ்டெக்கும் நீடூழி காலந் திடகாத் திர தேகமுடையவர்களாக இனிது வாழ்ந்து ஏழைக்குடிகளாகிய நம் மைக் கருணையொடு காத்துச் செங்கோல் செலுத்த எல்லாம் வல்ல கடவுளைத் துதிப்போமாக.

பத்திராதிபர்.

௮

# ஐந்தாவது ஜார்ஜ் மன்னரின் மகுடாபிஷேக வாழ்த்துக்கவிகள்.

அறுசீர்க்கழில் நெடிலடியாசிரிய விருத்தம்,

கடலாடை யுடுத்தநெடு நிலமகளின் உடல்குளிரக்
கருது முள்ளங்
கடவாத வுவகைகனி ததும்பவற நெறிதழைக்கக்
கற்றோ ரேத்தக்
குடபாகத் துறைந்தொளிருங் குறையற்ற கலைநிறைந்த
குணமா ராங்கில
திடமேறு முடிமன்னர் நிறையரசின் செயன்முறையைத்
தெரியா ராரே. 1

இரட்டைபட வாயிரநாக் கொண்டொளிருஞ் சேடனுக்கு
மின்னோ ராட்சித்
திரட்டினையுஞ் சிறப்பினையுஞ் சேர்த்தெடுத்துச் செப்புதற்குத்
தீரா தென்னில்
ஓரட்டியுமில் லாதெடுத்திங் கியம்பிடினு மெளியவென்று
வொன்றா லாமோ
இரட்டுபெறு முரசியங்க வரசியற்று மாங்கிலர்க
ளென்றும் வாழி. 2

பூமகளோ திருமகளோ பாமகளோ வரையீன்ற
பூவை வண்ண
மாமகளோ வெனப்பலருந் தனித்தனியே நினைந்துகவி
வனைந்து போற்றப்
பூமகளைப் புரந்தெல்லா வுயிரினுக்கு முடம்பாகிப்
பொருந்த வாழ்ந்த
மீமகளாம் விஜயையெனும் விக்டோர்யா விண்ணுலகம்
மேவப் பின்னாள். 3

ஆனவரொன் றியம்புகுலத் துதித்தபுக ழிவ்விஜயை
யறத்தாற் பெற்ற
மேன்வபுத் திரராகும் ஏழாவ தெட்வர்டு
மேவிப் பூவின்
ஆனவர சாட்சிதனை யன்னையெனத் தண்ணளியா
லமையச் செய்து
வானவருக் கரசாக வழிமுறையே சென்றடைந்தார்
மகிழ்வி னம்மா. 4

மட்டாருங் கமலமுக 'வெட்வர்டு' மன்னனுலகை
மறந்து விண்மேற்
றெட்டான வரசங்கே நடத்துகினு ஞாலமெல்லாந்
துயரின் மூழ்கிக்
கட்டோடு கலங்குநிலை கழறுதற்கு மெளிதன்றிக்
கடலை யென்றும்
விட்டேற விவர்புதல்வர் தோன்றியுயர் நலமடைந்து
விளங்கினரே. 5

நெடுங்காலம் புவிபுரந்து புகழ்நாட்டிப் பொன்னுலகை
நினைந்து புக்க
தொடுங்கோல வமுதமொழி விஜையையெனும் பாட்டியையுந்
தோன்ற நின்ற
கடுங்கோபங் காட்டாதே தெவ்வரைவென் காட்டநனி
களத்தி னோட்டும்
விடுங்காலப் படையேந்தும் எட்வர்டாந் தந்தையையும்
விளம்ப மண்மேல். 6

முன்னுரைத்த பிதாமகளின் சுகுணமொடு தாதையுடை
முட்டாக் கீர்த்தி
பன்னுசகு ணங்களுமே யிரண்டிரண்டு மோருருவம்
படைத்த பண்பால்
உன்னுதிருக் குணத்தைந்தாஞ் ஜார்ஜ் மன்ன ருதித்துள்ளா
ருலகுக் கம்மா,
இன்னுமொரு குறையுமுண்டோ வினித்துயரந் தானுமுண்டோ,
வியம்பத் தானே. 7

ஐந்தாவ தெனவடைகொண் டியம்புவது முறைப்பெயரா
லாவ தாகும்
ஐந்தாவ தானனு மவனிதலத் தாண்டபல
வரச ருள்ளும்
மைந்தாரு மிவர்முதல்வ ரெனப்பிறந்து மதிப்புடையார்
மரண்பின் மிக்க
மைந்தாரு மிந்தவெழிற் கோமகனுஞ் ஜார்ஜ்மன்னர்
வாழி மாதோ. 8

எம்மன்னர் தம்முன்னூ முன்மன்ன ரெனவிளங்கு
மியல்பு வாய்ந்த
எம்மன்ன னைந்தாவ தாஞ்ஜார்ஜூம் நன்மனையாம்
நலத்தைப் பூண்ட
செம்மன்னு மலர்மகணேர் குவீன்மேரீ ஆவ்டேக்குஞ்
சேர வூழி
இம்மன்னு புகழுடையா ராசுடனே குலமுழுது
மென்றும் வாழி. 9

ஊங்களரு மின்பவாழ் வெனமிளிரும் ஐந்தாஞ்ஜார்ஜு
எற்ற மந்
அங்கிலர்சொல் ஜூன்மாத மிருபத்தி ரண்டாகு
மமைநன் னாளில்
பொங்கமிகு தேவிகுவீன் மேரிடெக்கி னுடன் கூடிப்
போற்று மான
துங்கமணி மகுடமணிந் திங்லாந்தி னரசென்னத்
தோன்று மாலோ. 10

சிலமதிசென் றூற்பிறகு நம்பரத நாட்டிற்கே
சிறக்க வந்து
பலமதிவல் லோர்சூழ நமதுசக்ர வர்த்தியெனப்
பகரும் பான்மை
இலகுமுடி சூடியிருந் தெவ்வுலகு மடிவணங்க
விருப்ப ரந்நாள்
நலமிகுநங் களிப்பிதினும் பலகோடி மடங்குயரு
நண்ணுங் காலே. II

வாழியுல கும்மறையும் வானமுமே வாழிதிரு
வாலயங்கள்
வாழியைந்தா வதுஜார்ஜ்ஜும் குவீன் மேரி ஆவ்டெக்கும்
வாய்ந்த வின்பால்
வாழியவர் புகழுடனே சுகுணமெல்லாம் வாழியவர்
வண்மை யன்பு
வாழியவர் செங்கோலும் வீரமும்பல் லூழிவழி
வதிய மன்றே. 12

உ

## நம்மவர் பாலோர் வேண்டுகோள்.

நமரங்காள் !

உலகில் ஞானமே மிகச் சிறப்புடையது. ஒருவன் தன்னை யுணரவும், தலைவனையுணரவும், * இன்பை யெய்தவும் ஞானமின்றிக்கூடாதாகலின் ஞானமே ஒருவற்கு எதனினுஞ் சிறந்த பொருளாகும். இஞ்ஞானத்தாற் சிறந்தது இந்தியாவே.

நிற்க, இயற்கையிலே எல்லா அழகும் எல்லா வளனும் எல்லா அமைப்பும் அமையப்பெற்றுத் தண்மையும் வெம்மையும் மிகாமலுங் குறையாமலும் சமனொப்பச் சேர்ந்து விளங்குவதும் மலையரண், காட்டரண் நீரரண் முதலிய அரண்களை இயற்கையிலே பெற்று எந்நாட்டினும் நன்னாடென்றும் வளத்தில் முன்னாடென்றும் பொன்னாடும் இதற்கு இணையில்லாததென்றும் பன்னாட்டரும் புகழுஞ் சிறப்புடையதுமாகிய மேன்மைகளைக் கொண்டொளிர்வது நமது பரதக்கண்டமென்னும் இந்தியா. சிலநாடுகளில் சில சில சிறப்பேயிருக்கும் நமது நாட்டிலோ எல்லாச் சிறப்புகளும் ஒருங்கே அமையப் பெற்றிருக்கின்றது. எந்நாட்டவரும் கல்வி நாகரீகம் முதலியவற்றைப் பெறுதற்கு முந்தி நம் நாடே கல்வி நாகரீகம் முதலியவற்றைப் பெற்று பெருமித முற்றிருந்தது. நம் நாட்டிலிருந்தே பிற நாட்டவர்கள் நாகரீக முதலியவற்றைப் பெற்றனர். பிறநாட்டவர்கள் இலைகளை யணிந்திருந்த காலையில் நம் நாட்டவர் உயர்ந்த சல்லாவுஞ் சரிகை யாடைகளும் உடுத்திருந்திருக்கின்றனர்.

இன்றும் மிக நாகரீகமுற்று உயர்வாக இருக்கும் நாட்டவர்கள் கூட நம் நாட்டில் இப்பொழுது சில இடங்களில் உண்ணும் உணவு உடுக்கும் உடை முதலியவற்றின் சிறப்புத் தெரியாதவர்களாயுந் தெரியச்

* இன்பை எனவே முத்தியின்பத்தைக் குறித்து நின்றாலும் இம்மை மறுமை இன்பையுந் தழுவி நின்றது. சிறப்புப்பற்றி முத்தியின்பத்தைக் குறித்தோம். முத்தியின்பமே கிடைக்கும்பொழுது மற்றயது கிடைப்பது அருமையன்றென்பதே.

சக்தியற்றவர்களாயும் இருக்கிறார்கள். உணவெல்லாம் வயித்ரியமாக மாகவும் உடலுக்குப் பலஞ் செய்வதாயும் சுகந்தருவசாயும் நாவிற்கு இனிமை உடையதாயுஞ் சாந்தம் முதலிய நற்குணங்களைப் பெருக்கி ஞானத்தை உண்டாக்கத் தக்கவைகளாகவுமேயிருக்கின்றது. இதனை இன்னும் பிறநாட்டார் கண்டிலர். கண்டுகொண்டாலும் அவ்வாறு உணவமைக்க அப்பொருள்களுக்கு எங்கே போவர் அதற்கும் நம் நாட்டிற்கு வந்துதானே தீரவேண்டும். நமக்கோ உண்பொருள் முதல் எதற்கும் பிறநாடுகளை எதிர்பாராமலே பெறலாம். நாம் முயற்சி எடுத்து வேலை செய்யாதிருந்தால் அதற்கு நாமென்ன செய்யலாம்.

"சோம்பரென்பவர் தேம்பித்திரிவர்' என்றபடி வாடியிருக்கவேண்டியதே நமது கதி. நம் நாட்டில் விளையும் எல்லாப்பொருளும் பிறநாடுகளிற் சென்று சோம்பலில்லாத அந்நாட்டு மக்களால் பயன்படு நிலையையடைந்து வந்து அவர்கள் சுருசுருப்பாற்செய்யும் வேலைக்குப் பயன் கொடுத்தும் நம் சோம்பலுக்கு அபராதம் வாங்கியு நிற்கின்றது. பிறர்பால் மிக்க பொருளுங்கொடுத்ததனை இரந்து பெறுகின்றோம். ஆகையால் இனியேனும நம் சோம்பலைவிட்டுத் தூக்கததினின்றும் விழித்து எழுந்துநின்று கண்ணைத் துடைத்துக்கொண்டு சுற்றிலும் பார்த்து மற்றவர்கள் எதனுல் எவ்வளவு உயரப்போயிருக்கிறார்களென்பதைக் காண ஆரம்பிக்கின் கல்வியாலுங் கைத்தொழிலாலும் நாகரீகம் செல்வம் சுகம் முதலியபெற்று உயர்வு உற்றிருக்கின்றார்களென்பது புலப்படும்.

அவ்வாறு தெரிந்துகொண்டு நீங்கள் கல்வியையுங் கைத்தொழிலையும் நமது நாட்டில் விருத்திசெய்யின் புதிதாகச் செல்வஞ் சேர்க்காமற் போனாலும் உள்ளதும் போகாதிருக்கும் வழியைச் செய்தவர்களாவீர்கள், இன்றேல் இன்னுந் தாழ்வு வரும்.

கல்வி கற்க முயலுங்கள் கைத்தொழில் கற்றுக்கொள்ளுங்கள். சோம்பலையொழியுங்கள். அன்பு, தயை, கருணை, காட்டுங்கள். தெய்வ பக்தியும் இராஜவிசுவாசமும் மறவாது போற்றுங்கள். அவசியம உங்களுக்கு உயர்வுஉண்டாகும்." நன்மை எய்தும்.

கருணையுள்ள ஆங்கில மன்னர் நமக்கு எல்லா நன்மையையுஞ் செய்யச் சித்தமாக இருக்கின்றார்கள். எவ்வளவோ சிரமப்பட்டு நமக்குக் கல்வியுங் கைத்தொழிலும் மிக உண்டாகவேண்டுமென்று முயற்சிக்கின்

றூர்கள், இவ்வளவு செய்தும் இன்னும் பயன்பெறாதிருப்போமானால் இது யாருடைய குற்றமாகும்? தென்னையில் ஏறுகின்றவனை எதுவரையிலுந் தாங்குவார்கள்? கைக்கெட்டிய மட்டுந்தானே தாங்குவார்கள்; அதற்கு மேலுந்தாங்குவார்களா? காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளுங்கள். இதுபோலுஞ் சமயம் இதற்குமுன் கிடைத்திருந்ததுண்டோ? இது மட்டுமல்ல நம்மரசாங்கத்தார் செய்யும் நன்றிகளை வந்தனத்துடன் ஏற்று அவர்க்கு விசுவாசங் காட்டுவது நமது கடமை. முதல் வாக்கியத்தால் நமது நாடு ஞானத்தினுற் சிறந்ததென்று எழுதினோம். இப்பொழுது அதற்கு எதிராக நினைக்கும்படி யிருக்கின்றது. பிறநாட்டவர் அப்படியும் நினைத்துஞ் சொல்லியும் எழுதியும் வருகின்றார்கள். ஆகையால் இக்குறைகளை எல்லாம் நீக்கி முன்னுக்குவர முயற்சிப்பது நமது முக்கிய கடன்மையாகும்.

**பேர்துநலப்பிரியன்.**

---

## எரிமலைகள்:—அவற்றின் தோற்றமும் உற்பத்தியும்.

(36ம் பக்கத் தொடர்ச்சி)

முன் சஞ்சிகையில் எரிமலைகளின் தோற்றத்தைப்பற்றிக் கூறினோம். அவைகளின் உற்பத்தியைப் பற்றிச் சற்று விசாரிப்போம்.

அதன் காரணத்தைப்பற்றி முக்கியமாய் இரண்டு விதமான கொள்கைகள் ஏற்படுகின்றன.

முதலாவது எரிமலைகளின் கம்பீரமான தோற்றத்தையும் உக்கிரத்தையும் அதனால் உண்டாகும் ஜனச்சேதம் பொருள் நாசம் முதலியவைகளையும் நோக்கும் அநேகர் அவ் எரிமலைகளின் எரிவாயில்களைப் பிர்மாண்டமான புகைப் போக்கிகள் போலிருக்கிறதென்றும் அப்புகைப்போக்கிகள் பூமியின் மத்தியம் வரையில் ஊடுருவிச்சென்று அங்குள்ள அக்கினியோடு முடிகிறதென்றுங் கூறுகின்றார்கள். இக்கொள்கையானது தற்காலத்தில் ஏற்பட்டுள்ள முயற்சியைக் கொண்டும் ஊகத்தைக் கொண்டும் சரியல்லவென்று கருதுவதோடு அவற்றின் உற்பத்திக்குக் காரணம் எரிமலைகளின் பக்கத்துள்ள பூமியின் தன்மையைப் பொறுத்திருக்கிறதென்று கூறவேண்டியதாகவே யிருக்கிறது. இக்கொள்கைக்கு அனேககாரணங்களுள.

பூகோளப் படத்தைப் பார்த்தால் எரிமலைகள் கடற் கரைப் பக்கங்களிலே அமைந்துள்ளன வென்றும் கண்டங்களின் உட்பிரதேசங்களில் அவைகள் இல்லாதிருப்பதும் நன்கு புலப்படும்.

அதற்கு உதாரணமாக ஆண்டிஸ் (Andes) மலைத்தொடரில் அனேக எரிமலைகளிருக்கின்றன. ஆல்ப்ஸ் (Alps) யூரல் (Eurals) ஹிமயமலை (Himalayas) ஆகிய இம்மலைத்தொடர்களில் எரிமலைகளே கிடையா பஸிபிக் (Pacific) மகாசமுத்திரக்கரையோரத்திலோ எரிமலைகள் சூழ்ந்து மிகுதியாயிருக்கின்றன. நியூசிலண்டு (Newzealand) லுள்ள எரிமலைகள் முதல் ஆரம்பித்தால் அவற்றிலிருந்து வியூஜி ஐலண்டுஸ் (Fiji Islands) சாலோமன் ஐலண்டு (Solomon Island) நியூகினீயா (New Guinea) டய்மர் (Timor) சாம்பவா (Sambava) லாம்பாக் (Lombock) ஜாவா (Java) சுமட்ரா (Sumatra) தி பிலிப்பயின்ஸ் (The Philipines) ஜப்பான் (Japan) அலன்டியன் ஐலண்டுகள் (The Alentiuan Islands) ராக்கி மவுன்டன்ஸ (Rocky Mountains) மெக்ஸிகோ (Mexico) பெரு (Peru) சில்லி (Chilli) டெரா டல் பிகோ (Tierra del feego) முதலியவைகளிலுள்ள எரி மலைகள் வரிசைக்கிரமமாய்ப்படத்தில் அமைந்திருப்பதும் இன்னும் தெற்கே விக்டோரியா (Victoria land)-வில் உள்ள எரிமலையும் பார்ப்போம். அதாவது படத்தில் சில எரிமலைகள் ஓர் வட்டத்தில் அமைந்தாற் போலிருக்கின்றன.

ஆனால் அட்லாண்டிக் Atlantic மகா சமுத்திரத்தில். இம்மாதிரி எரிமலைகள் கிடையா.

பூமியின் மேல்பாகமானது நாளடவில் குளிர்ச்சியால் இருகிக் குறுகிக் கொண்டு வருகின்றதென்பது நமக்கு நன்றாய்த் தெரிந்த விஷயம். இதன் காரணமாக வெடிப்பும் பிளப்பும் உண்டாகும் போது சில பாகங்கள் மற்ற இடங்களை விட அதிக உஷ்ணத்தை யடைகின்றது. அவ்வுஷ்ணப் பிரதேசங்களே எரிமலைகளினுற்பத்திக்குக் காரணமாகவுள்ளது.

மேலும் பூமியில் வாஸ்தவமான மலைத்தொடர்கள் யாவை யென்றால் கண்டங்களேயாகும்.

இம்மலைத்தொடர்களை ஆல்பஸ் (Alps) ஆண்டிஸ் (Andes) ஆகிய மலைத்தொடர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் விஷயத்தில் பின்

கூறப்பட்டவைகளை வெடிப்புகளாகவே கருதவேண்டும். ஆகையால் வாஸ்தவமான மலைத்தொடரின் ஓரம் அதாவது கடற்கரை யோரத்தில் உஷ்ணம் அதிகமாயிருக்கும். எரிமலைகளும் கண்டங்களின் நடுப் பிரதேசங்களில் அதிகமாகக் கிடையா. கடற்கரை யோரங்களிலே அவைகள் அமைந்துள்ளன.

எரிமலைகளின் உக்கிரம் பக்கத்து பூமியின் தன்மையைப் பொருத்திருப்பதற்கு இன்னொரு காரணமும் உண்டு. ஒன்றுக்கொன்று சமீபமாயிருக்கும் எரிமலைகள் தனித்தனியே யாதொரு சம்பந்தமுமில்லாமல் தங்கள் உக்கிரத்தைக் காண்பிக்கின்றன.

இதற்கு உதாரணமாக காவே (Hawai) என்ற சிறிய தீவிலுள்ள கிலோன் (Kiloen) முனுவோ Mounavoa என்றஎரிமலைகளே.

மேலும் எரிமலைகள் பூமியினுள் மத்தியிலுள்ள நெருப்புக் கடலோடு சம்பந்த மேற்பட்டிருந்தால் அவைகளினுக்கிரம் சிற்சில விதிகளை அனுசரித்தே ஏற்படவேண்டும். அவ்வாறில்லாததால் நாம் முன் காட்டிய கொள்கை முற்றிலும் ஒப்புக்கொள்ளத் தகாததாகவே ஏற்படும்.

(தொடரும்).

Madura.
31—5—11

R. RAMIYA
Physics Lecturer
S. P. G. College.

## விநோதக் கூற்று.

தந்தை:— [மனைவியைப் பார்த்து] "நீ அடுத்த வீட்டிற்கு அடிக்கடி போகாதே அந்த வீட்டுக்காரனாகிய குப்பன் நல்லவனல்ல" என்றான்.

மனைவி:— "அப்படியா! நான் இனி அங்கு போகவில்லை" என்றாள்.

மகன்:— [4 வயதுச் சிறுவன்] "இல்லை அப்பா அவன் ரொம்ப நல்லவன். தினம் நீ இல்லாதபோது வந்து எனக்கு மூன்று காசுங் கொடுத்து அம்மாளுக்கு ஒரு முத்தமுந் தந்துபோகின்றான்" என்றான்.

உ

ஸ்ரீராமஜெயம்.

# கம்பராமாயணச் செய்யுளாராய்ச்சி.

(38-ம் பக்கத் தொடர்ச்சி.)

இன்னும் தாடகையை வதைத்ததும், வேள்வியைக் காத்ததும், சிவபிரான்சிலையை முறித்ததும், பரசுராம பங்கஞ் செய்ததும், கர தூஷண திரிசிரசு முதலியோரையழித்ததும், மராமரம் எய்ததும், வாலியை வதைத்ததும், சமுத்திரத்தை வற்றச் செய்ததும், ராவணாதிராக்ஷதர்களைக் கொன்றது முதலிய ஸ்ரீராம பிரானுடைய தோள் வலியைக் கூறுதலே இராமாயணமாய் முடிதலின், ராமாயண பாராயணஞ் செய்வார்க்கு மேற்கூறிய பயன்கள் உண்டாம் என்பதை யுணர்த்தத்தோள் வலி கூறுவோர்க்கு என்றதுங் கருதத்தக்கது.

அல்லாமலும் மங்கலங்கூறி நூல் இயற்றப் புகுந்த ஆசிரியர் மேற் சிறப்புப்பாயிரத்து முதற் செய்யுளில் "உலகம்" என மங்கலங்கூறுவாரேனும், ஈண்டும் ஏனைய மங்கலப் பொருள்கள் போலன்றிச் சர்வ மங்களகரனாய் என்று முள்ள விஷ்ணு மூர்த்தியினுடைய திருநாமங்களுள் ஒன்றாகிய அஷ்டாக்ஷர மகாமந்திரத்தின் முதலெழுத்தாகிய நா என்பதை மங்கலமாக முதலில் வைத்து நாடிய பொருள் எனக் கூறியது இடையிடையே காயத்திரீ மகா மந்திராக்ஷரங்கள் அமைந்துள்ள வான்மீகம் போல இந்நூலும் தெய்வத் தன்மையுள்ள தென்பதை விளக்குகின்றது. பின்னும் "ஆதியரியோநமோ நாராயணா" என்று மந்திரத்தையே கூறியதும் இப்பொருளை வற்புறுத்தும். இன்னும் விரிப்பிற் பெருகும்.

இனி அவையடக்கங் கூறுமிடத்து

"நொய்தி ழைய்யசொல் நூற்கலுற்றே னெனை
வைதவைவின் மராமர மேழ்துளை
யெய்த வெய்தவற் கெய்திய மாக்கதை
செய்த செய்தவன் சொன்னின்ற தேயத்தே"

என்று கூறப்பட்ட செய்யுளின் பொருளைச் சிறிது ஆராய்வாம்.

இது மராமரங்களேழும் துளையுறும்படி நிறைமொழி மாந்தர் சபித்த சாபம் போல அம்பெய்த ஸ்ரீராமபிரானுக்குரிய பெரிய சரித்திரத்தை (அமைத்துச்) செய்தவான் மீகி முனிவருடைய நூல் (வான்மீகி ராமாயணம்) பிரபலமாக நிலைபெற்றுள்ள இத்தேசத்தில் யானும் அச்சரித்திரத்தை யமைத்து மிகவும் அற்பமாகிய சொற்களைக்கொண்டு ஒரு நூல் செய்யத்தொடங்கினேன். இதனாற் பயன் யாது? என்று பொருள்படும்.

வான்மீகம் தவவலியுடைய முனிவராற் செய்யப்பட்டதாதலின் பயனிறைந்த இலக்கணவன்மையுடைய சொற்களால் அமையப்பெற்றது என்பதை யுணர்த்தச் செய்தவன் சொல்லெனப்பட்டது. சொல் இங்கு நூலுக்கு ஆகுபெயர்.

எனவே வான்மீகம் வழங்காத இடத்தில் என்னூலுக்குச் சிறிது மகிமை யுண்டாகலாமேயன்றி அது வழங்குமிடத்து இது சூரியன் முன் மின் மினியை நிகர்க்குமென்றாயிற்று.

அன்றியும் ஒரு காரியஞ் செய்யப் புகுந்தவன் இடமுங் காலமும் கருவியும் பயனு மறியாது செய்தல் பேதைமையா மாதலால், 'நூற்கலுற்றேன் என, என்பதற்கு இஃதென்ன பேதைமைச் செயல் என்னும் பொருள் கொள்ளலாம். அறிவுடையசான்றோர் பலர் நிரம்பியுள்ள இடத்தையும், வான்மீகம் பிரபலமாக வழங்கி வருங்காலத்தையும், என்னுடைய அற்பச் சொல்தக்க கருவியாகா தென்பதையும், எனது காவியத்தால் எனக்கும் பிறர்க்கும் ஒரு பயனுமாவதில்லை யென்பதையும் உய்த்துணராது செய்தலே ஈண்டுச் சொல்லப்பட்ட பேதைமைச் செயலாம்

இனிக் "கதை செய்தவன் சொன்னின்ற தேயத்தே எனவைத்தவை வின் நூற்கலுற்றேன்," எனக்கூட்டி ராம கதையை யியற்றியவான் மீகி முனிவருடை புகழ் நிலைபெற்ற இத்தேசத்தில் யானே என்னை யொன்றுந் தெரியாதவனென்று வைதுகொண்ட வசைமொழியைப்போல நூல் செய்யத்தொடங்கினேனென்று பொருள் கொள்ளலு மொன்று. என தறியாமையும் மாட்டாமையும் புலப்படுத்தி யெனக்கு யானே பழி தேடிக்கொண்டதன்றி இராமாயணம் பாடியதின்று என்றவாறும்.

இன்னும் வைதவைவில் மராமர மேழ்துளை, யெய்தவெய்தவற் கெய்திய மாக்கதை செய்த செய்தவன், என்பதில் முக்கியமான வேறொரு விஷயமும் அமைந்துள்ளது, அதாவது நாரதரால் இராமாயணம்

உபதேசிக்கப் பெற்ற வான்மீகி முனிவர் ஒருநாள் நண்பகலில்தமசா நதிக்கு நீராடச்செல்லுகையில் அங்கு ஆணும் பெண்ணுமாகக்கூடிக்களித்திருந்த அன்றிற் பறவைகளிரண்டி லொன்றாகிய ஆணன்றிலை யொரு வேடன் அம்பெய்து கொன்றனனாக, அதை நோக்கிய மற்றைப்பெண்ணன்றில் வருந்தித் துடி துடிக்கும் பரிதாப நிலையை முனிவர்கண்டு மனஞ்சகிக்காமல் "மாநிஷாதப்ரதிஷ்டாம், த்வமகமஸ்ஸாஸ்வதீஸமா ஹ—யத்க்ரௌஞ்சமிதுனாதேகம் அவதீஹிகாமமோஹிதம்"

என்று கடவுளருளால் தாமே தமது வாக்கில் உண்டாகிய சுலோகத்தால் வேடா! நீ காமத்தால் மோகங்கொண்ட பெடையுஞ் சேவலுமாகிய கிரௌஞ்சபக்ஷிகளில் ஒன்றாகிய சேவலைக் கொன்றதனால் விரைவில் அழிந்து விடுக, எனச்சபித்து விட்டுப்போய் நீராடித் திரும்பிவந்த பின்னர் அந்தச் சுலோகத்தைக் கவனித்துப் பார்க்கையில் அதில் திருமாலே ஸ்த்ரீபுமான்களாகிய ராக்ஷதர்கள் இருவருள் காமத்தால் மோகங்கொண்டராக்ஷஸனை [ராவணனை] நீ கொன்றதால் அநேககாலம் புகழுடன் வாழ்க என்ற, ராம சரித்திர சங்கிரகப் பொருள் தொனியர்த்தமாக விளங்கக்கண்டு நமது முயற்சியின்றி யிங்ஙனம இப்பொருளும் இதில் அமைதராக் காரணம் யாதோ வெனத்திகைத்து நிற்கையில் பிரமதேவர் அங்கு எழுந்தருளித் தாமும் அம்முனிவருக்கு ராமாயணத்தை உபதேசித்துப் பாடச் செய்தனர் என்ற வரலாறும்.

இப்பொருளுக்கு 'வைதவைவில் எய்திய மார்கதை' யெனக்கூட்டி வேடனைவைத வசைமொழியில் எழு மராமரங்களைத் துளைத்த ஸ்ரீராமபிரானுக்குத் தொனியர்த்தமாகக் கிடைத்த சிறந்த கதை யெனப் பொருள் கொள்க.

இன்னும், ஸ்ரீராமபிரானை சுக்கிரீவன் பரீக்ஷித்த மராமரம் எய்தலாகிய அரிய பரீக்ஷையில் தேறிய வீரன் என்று புகழ்தற்கு. "மராமரம் எழ்துளைபெய்த வெய்தவன்" என்றதுங் கருதத்தக்கது.

(இன்னும் வரும்.)

ரு. சுப்பிரமணிய ஐயர்.
தமிழ்ப் பண்டிதர்,
ஐ ஸ்கூல், ஸ்ரீரங்கம்.

# முயற்சி.

நாம் மேற்கொண்டியற்றப் புகுந்த ஒரு தொழிலை மனந் தளராது என்ன கஷ்ட நஷ்டங்கள் எதிர்பாராதுவரினும், பொறுமையுடன் செய்து முடிப்பதற்குத் தான் முயற்சி எனப்படும்.

முயற்சி, மனோமுயற்சி, தேகமுயற்சி என இருவகைப்படும் தேகம் சவுக்கியமாயிருந்தாலன்றி மனோ முயற்சி செய்வது கூடாது.
உலகின் கண் எவ்வித நற்செய்கைகளைச் செய்யப் புகினும், அனேக இடையூறுகள் நேரிடுவது இயற்கையே.

இவ்வாறு இடையூறுகளால் மனந்தளர நேரிடுங்கால், நாம் தொடுத்த கருமத்தை இப்பொழுது கைநழுவவிடின், இதுவரையில் செய்த முயற்சி வீணாகப் பலனின்றிப் பாழாகப் போகின்றதுவே எனக் கருதி ஊக்கத்தைப் பெருக்கி கருமத்தைக் கண்டிப்பாய்ச் செய்தே தீரவேண்டும்.

பெரும்பாலர் மனதிடமின்றிக் கருமங்களைச் சரிவர நிறைவேற்றாமலும், தங்களுக்கும் யாதொரு பிரயோஜனமின்றியும் விட்டு விடுகின்றனர்.

சிலர் முயற்சி செய்யும் மார்க்கங்களை அறிந்துமவைகளை அனுபவத்திற்குக் கொண்டு வருகிறதில்லை. இவர்கள் தங்கள் சாமர்த்தியங்களைத் தாங்களே குறைவாகக் கருதி நற்செய்கைகளைச் செய்து பலனடைய முன்னுக்கு வாராமல் மூலையைத் தேடுகின்றனர்.

மற்றுஞ் சிலர் விதிப்பயனென்றும் அதிஷ்டமிருப்பின் யாவும் வந்து சேருமென்றும் வீணாகக் கருதித் தங்களுக்குப் புத்தி கூர்மை எவ்வளவு இருப்பினும் உழைப்போடு கூடிய முயற்சி இல்லாது வறுமையடைகின்றனர்.

இதற்கு நேரிடையாக, மந்த புத்தியினரொனக்கருதப்படுகின்றவர்கள், தங்களினது விடாமுயற்சியினால் முன் கூறியவர்களால் அசாத்தியமெனக் கருதிய கருமங்களைச் செய்து கீர்த்திபெறுகின்றார்கள்.

எவ்வாறு ஜலம் பள்ளத்தாக்குகளையும், வண்டுகள் புஷ்பங்களையும், நோக்கிச் செல்லுகின்றனவோ அவ்வாறே விதி நமது உழைப்பு, முயற்சி, நடவடிக்கை, இவைகளை அனுசரித்தே தன் அதிகாரத்தைச் செலுத்துகின்றது.

விதியை மதியால் வெல்லலாமெனக் கூறுவதை மெய்ப்பிக்க,

"உலையா முயற்சி களைகணு வூழின்
வலிசிந்தும் வன்மையுமுண்டே—உலகறியப்
பான்முளை தின்று மறலியுயிர் குடித்த
கான் முளையே போலுங் கரி."

என்று குமரகுரு பரசுவாமிகள் கூறியுள்ளபடி,

பதினாறு வயதில் சாகும்படியான ஏற்பாட்டோடு பிறந்த மார்க்கண்டேயர் முயற்சியால் சிவனருளைப் பெறத்தக்கதவஞ் செய்து என்றும் பதினாறு வயதாயிருக்குமாறு வரம் பெற்றிருக்கிறார் என்பது யாவரு மறிந்ததே. இதனால் முயற்சியுடையார் இகழ்ச்சியடையா ரென்பது சொல்லாமலே விளங்கும்.

வானசாஸ்திரிகளாகிய [Halley, Kepler, Copernicus] ஹேலி கீப்லர், கோபர்நீகஸ் முதலானவர்களென்ன.

பூமி, சூரியனைச்சுற்றுகிறதே ஒழிய சூரியன் பூமியைச் சுற்றவில்லை என முதன் முதல் கண்டு பிடித்துக் கூறியதற்கு, தான் என்ன சித்திரவதைக்கு இராஜாங்கத்தாரால் உள்பட நேர்ந்தபோதிலும் தான் கண்டுபிடித்ததை நிலை நிறுத்தின Galileo காலிலியோ என்ன, நாம் சுலபமான செலவுடன் சுகமாய் ஏறிச்செல்லும் புகைவண்டியைக் கண்டு பிடித்த [Stephenson] ஸ்டீவன்சன் துரை என்ன.

•இன்னும் இவர்களைப் போன்றவர்கள், தங்களது கருமங்களை முடிப்பதற்கு உள்பட்டகஷ்ட நஷ்டங்களைப் பார்ப்பின்.

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்."

என, குமரகுருபர சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியதைப் பார்க்கிலும் பதின் மடங்கு அதிகமாகவே பாடுபட்டுப் பலனை யாரும் அடையும் படியாகச் செய்திருக்கின்றார்கள்.

ஆகையால் முயற்சியின்றி எக்கருமமும் செய்ய வொண்ணுது.

இதனை யறியாத வாலிபர் தங்களினது நீரிட் குமிழி போன்ற இளமைப் பிராயத்தை நற்கருமங்களில் செலவிடாது. நிலையற்ற அற்ப சுகங்களில் காலத்தைப் போக்கி முதுமையில் வருந்துகின்றனர்.

சில மாணவர்கள் தங்களினது கடமைகளைச் செய்யப்போதுமான காலம் போதாதெனவும், தங்களால் சாத்தியப்படத்தக்கதல்ல வென வுந் தப்பபிப்பிராயங் கொண்டு வாழ் நாளை விணுளாக்கு கின்றனர்.

முயற்சியின்றிக் கீர்த்தி பெற்றவர்கள் உலகில் யாருமிலரென்று இவர்கள் அறியார்போலும். நாம் வேலை செய்யினும் செய்யாவிடினும் காலம் சதா நம்மைக் கடந்து கொண்டே இருக்கின்றது: ஆகையால் காலத்தை வீணில் கழிக்கலாகாது. சென்ற காலத்தை யாவராலுந் திருப்பியடைதல் கூடாதகாரியம்.

உலகம் ஒரு பெருங் கண்ணுடியைப் போன்றது. நாம் அத னிடத்து நகைப்பின் அதுவும் நகைக்கின்றது. வெறுப்பின் நம்மைத் திரும்பி வெறுக்கின்றது. செகப்பு நிறமுள்ள கண்ணுடியின் மூலிய மாய் நோக்கின் செகப்பு நிறமாகப் புலப்படுகின்றது. பச்சை வழி யாய்ப் பார்ப்பின் பச்சையாய்த் தோன்றுகின்றது.

நாம் உலகில் எவ்வாறு நடந்துகொள்ளுகின்ருேமோ அவ்வாறே பலன் அல்லது தண்டனை நமது கருமங்களுக்குத் தக்கவாறு அடை கின்ருேமென்பது திண்ணம்.

கடினமான மார்க்கந்தான் நம்மைத் துக்மேற்ற இடத்திற்குக் கொண்டு போகினறது.

இதனை உணராத, சோம்பன், டம்பன். இவர்களின் சகோதரர் களாகிய தீவிட்டுத்திருடர், இவர்கள் சுகமடையும் மார்க்கங்களைத் தாங்களே இழந்து முயற்சியுள்ளான் சுகங்களைப் பொய் பேசியோ களவாடியோ சுகமடையப் பார்க்கின்றனர்.

ஆயினும் அவர்கள் எண்ணம் அவர்கள் நினைத்த அவ்வாறு பெரிதும் பலியாமல் தண்டனைக்கும் அவமானத்திற்கும் ஆளாகின்றனர். இவ்வாறொத்த அவமதிப்புகளுக்குச் சிலர் ஆளானதின் மூகாந்தரங்களை என்னவென உற்று நோக்கின், முக்கிய காரணம் சோம்பலென்பது தெளிவாய்த் தெரியவரும். அனேகமாய் நமது இந்தியாவின்கண் பல குடும்பங்களில் ஒருவன் சவரட்சணைக்கீழ் பலர் இருப்பதை நாம் பார்க்கின்றோம். ஒருவன் 100 ரூபாய் சம்பாதிப்பானாகில் அவனை எதிர் பார்த்துக் கொண்டிருப்பவர் குறைந்தது 6 அல்லது 7 பெயர் இருப்பர். அனேக உத்தியோகஸ்தர்களின் குமாரர்களே திண்ணைத் தூங்கிகளாய் இருக்கின்றனர். காரணம் கூறின் எடுப்பாரும் பிடிப்பாருமிருந்தால் பிள்ளை துள்ளித்துள்ளி அழுமென்பதைப்போல் சுகமாய் அன்னம் போடுவோரிருப்பின் பிள்ளைகள் திண்ணைத் தூங்கிகளாவதற்குக் கேள்ப்பானேன். இவர்கள் தங்கள் பெற்றோர் காலத்திலும் அன்னவர் பிற்காலத்திலும் குடி, சூது, விபசாரம் இவைகளைக் கற்று அவமானத்திற்கு ஆளாகின்றனர்.

இது நிமித்தம் பெற்றோர்கள் தங்களினது மக்களிடத்துள்ள ஆசையை அவர்களிடத்தில் மறைத்து, துஷ்டசாவகாசம் செய்யவாவது ஒடியொளித்துத் தூர்த்தராய்த் திரியவாவது இன்னும் மற்ற தீய செயல்களைக்கற்றுக்கொள்ளவாவது தன்னிச்சையாய்விடாமல் அடக்கிப் பெற்றோர் தேடிய திரவியத்தை வைத்துக் குமாரர்கள் யோக்கியர்களாய் இருந்தால் போதுமென்றெண்ணாமல் அவர் அவர்கள் தாங்களே சம்பாதிக்கும் நிலைமைக்குக் கொண்டுவர வழி தேடுவோர்களாக.

இது இம்மட்டும் நிற்க, தற்காலத்துள்ள பண்டகசாலைகளையும் தொழிற்சாலைகளையுஞ் சற்று பார்த்து வியாசத்தை முடிப்போம். தற்போது இந்தியாவின்கண் பரதேசங்களைப்போல் இயந்திர உதவியினால், பருத்தி நூல், துணி, தீக்குச்சி, கண்ணாடி, காகிதம் முதலான சாமான்களைச் செய்யும் பொருட்டு பல இடந்தோறும் தொழிற்சாலை, பண்டகசாலை, கப்பல் கம்பேனி முதலானவைகளை ஏற்படுத்தினர்; ஆயினும், சிற்சில இடங்களில் மேற்கண்டவை அபிவிருத்தியாகி வருகின்றனவேயொழிய அனேக பாகங்களில், முக்கியமாய்த் தென்தேயத்தில், எவ்வாறு இந்தியாவின் பூமி அமைப்பு வடபாகத்தில் விசாலித்துத் தென்பாகத்திற் குறுகி இருக்கின்றதோ அவ்வாறே வடபாகங்களில் முயற்சி பெருகித் தென் தேயங்களில் குறைந்திருக்கிறது. இத்தகைய குறைவுகளுக்குத்

தென் தேயத்தார் இடங்கொடாது இந்தியாவின் தென்பாகத்தில் சமுத்திர பாகம் பெருகி இருப்பதைப்போல் ஊக்கத்தைப் பெருக்கிப் பண்டகசாலைகளையும், தொழிற்சாலைகளையும் விருத்தி செய்வார்களென்று நம்புகின்றேன்.

இதை இத்துடன் நிறுத்தி முயற்சியின் சிறப்புடன் வியாசத்தை முடிவுக்குக் கொண்டுவரலாம்.

உழைப்போடு கூடிய முயற்சி எவ்வளவு சிறப்புள்ளது! அது என்னென்ன அருமையான காரியங்களைச் செய்கின்றது பார்! முயற்சி, காட்டிலுள்ள மரத்தை வெட்டிக் கப்பல் செய்து அசாத்தியமான சமுத்திரத்தின் வழியாய் அலைகளை இலட்சியம் பண்ணுமலும், புயலுக்குப் பயப்படாமலும், அன்னிய தேசங்களுக்குச் சென்று அங்கு அகப்படும் பொருள்களைப்பெற்று இன்னும் மற்றப்பிரதேசங்களுக்குக் கொண்டுபோய் அத்தேசங்களின் சிறந்த பொருள்களை அவைகளுக்கு மாறாகக் கொண்டு, இவ்வுலகத்தின் கண்ணுள்ள யாவரும் ஒரே தன்மையாய்ச் சவுக்கியம் பெறுதற்குக் காரணமாக நிற்கின்ற வர்த்தகத்தை நன்றாய்த் தழைத்துச் செழித்தோங்கும்படிச் செய்கின்றது!

இன்னும் அசாத்தியமாகக் காணப்படும் செய்கைகளை எவ்வளவும் லட்சியம் செய்யாது பெரிய பிரவாகமாக ஓடும் நதிகளை அளவிட்டு, உளைவிழும் சதுப்பு நிலத்தின் மேல் செவ்வையான பாதைகளை உண்டு பண்ணி, அழகான காணுறுகளின்மேல் அந்தரத்தில் தொங்குவதுபோல் வாராவதிகள் கட்டி, மலைகளின் கீழாகக் குகைபோல் பாதைகளைத் துளைத்து, புகைவண்டிபோக வழி பண்ணுகிறது!

இது பற்றியன்றோ தெய்வப்புலமைத் திருவள்ளுவரும்

"தெய்வத்தா லாகா தெனினும் முயற்சி தன்
மெய்வருந்தக் கூலி தரும்"

எனத்திருவாய் மலர்ந்தருளி இருக்கின்றனர்.

ஆதலால் ஒவ்வொருவரும் முயற்சியுடையவர்களாகவே இருத்தல் வேண்டும்.

Kothavalchavadi }
Trichy, 5—6—1911. }

ஜெ. எஸ். நரசிம்மலு நாயுடு.
மிராசுதார்.

## நமது நாட்டுப் பெண்மணிகளின் தற்கால நிலைமை.

(46-ம் பக்கத் தொடர்ச்சி.)

பெண்களால் ஆடவர்களுக்கு அதிக துன்பமேயன்றி இன்பம் அதிகமில்லாமையால் இவ்விடைக்காலத்தில் ஆடவர்கள் பெண்பாலாரை யெல்லாங் குறைவாக மதித்துத் தம்மை உயர்வாக மதித்துக்கொள்ள நேர்ந்தது. இவ்வபிப்பிராயம் பலருக்குப் பொருத்தமுடையதாக விருக்காதோ என்று அஞ்சினேனானாலும் என் அபிப்பிராயத்தை எழுதாதிருக்க முடியாமையால் துணிந்து இங்கு எழுதிவிட்டேன். இக்காலத்து நிகழ்ந்த பல அருமைச் சரிதங்களை எனது பெற்றோர் வாயிலானும் எனது பர்த்தா காலஞ்சென்ற ஸ்ரீலஸ்ரீ அமிர்த கவி அமிர்தம்பிள்ளை அவர்களின் வாயிலானுங் கேட்டிருக்கின்றேன். அவை கேட்பவர் மனத்தைக் கசிவித்துக் கண்ணீருகுக்கச்செய்யும் அவற்றைப் பின்னர் சமயம் வாய்க்கும்பொழுதெல்லாம் எழுத மறவேன்.

இன்னும், "இல்லறமல்லது நல்லறமன்று" (பொருள்:— வீட்டில் மனைவியுடன் கூடியிருந்து செய்யும் அறமே நல்ல அறமாகும், துறவறமோ நல்லது அன்று என்பதாம். இல்லறம் அனுட்டித்தற்கு சுலபமானதும் எளிதிற் பயன்தரக்கூடியதும் ஏனைய மூன்று ஆசிரமத்தாற்கும் உதவியாயிருத்தலின் மிகச் சிறப்புடையதுமாகும். மற்றைத் துறவறமோ அனுட்டித்தற்கு மிகச் சிரமமுடையதும் அனுட்டிப்பேமென மேற்கொண்டு நின்றார் வழுவின் பெறுநிலை மிகப் பரிதபிக்கத் தக்கதுமாதலினாற்றான் தெய்வப்புலமை ஔவையாரும் இங்ஙனம் மொழிந்திருக்கின்றாள்.) என்றும், "மங்கலமென்பமனை மாட்சி" (பொருள்:—மனையாளது நற்குண நற்செய்கைகள் ஒருவனுக்கு நன்மை என்பதாம்; ஒருவனுக்கு நன்மைகள் எய்துதற்கு நற்குண நற்செய்கைகளையுடைய மனைவியே காரணமென்பதுங் கண்டன்றோ இவ்வண்ணந் திருவள்ளுவநாயனாருந் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார்?) என்றும், "இல்லாளகத்திருக்க இல்லாத தொன்றில்லை" (பொருள்:—மனைவி வீட்டிலிருக்க ஒரு குறையுமில்லை என்பதாம். உத்தம குணங்களையுடைய மனைவி வீட்டிலிருப்பின் எல்லாச் செல்வமும் எல்லாச் சுகமும் நிறைந்திருக்கும் எனக்கூறியுள்ளாள் தெய்வப்புலமைஔவையும்.) என்றும், "பாழே மடக்

கொடியில்லாமனை" (பொருள்:—இளமை பொருந்திய வல்லிக் கொடி போலுஞ் சாயலையுடைய பெண்ணை யில்லாத வீடு ஒரு பயனு மில்லாததாகும் என்பதாம். மனைவி யில்லாதவீடு சுடுகாடு இடுகாடு போன்றதொக்கும் எனப்பொருள் விளங்க ஒளவையுஞ் செவ்வையாகப் பகர்ந்துள்ளாள்.) என்றும் இன்னும் இதுபோன்ற பல மேலோரின் மொழிகளைப் படியாமையினாலா அல்லது மறந்தா சிவப்பிரகாச சுவாமிகள் தந்திருவாக்கினால்

"சேய் கொண்டாருங் கமலச் செம்மலுடனே யரவப்
பாய் கொண்டானும் பணியும் பட்டீச்சுரத்தானே
நோய் கொண்டாலுங் கொளலா நூறுவயதாமளவும்
பேய் கொண்டாலுங் கொளலாம் பெண்கொள்ள லாகாதே"

(இதன் பொருள்:—செவந்த உந்தியங்கமலத்து விளங்கும் பிரம்மாவும் அரவின் மேற்றுயிலும் விஷ்ணுவும் வணங்குந் தலைமை வாய்ந்தவனே! பட்டீச்சுரமென்னுந் தலத்தி லெழுந்தருளியிருக்குஞ் சிவபெருமானே! நோயைக்கொண்டாலுங் கொள்ளலாம், அல்லது ஏற்பட்டுள்ள நூறு வயது மட்டும் பேய் கொண்டிருந்தாலு மிருக்கலாம் ஆனாற் பெண்ணைக் கொள்ளுதலோ கூடாது என்பதே.) என்று கூறியருளினார்? இல்லை, முன்னோர் நூற்களை முற்ற உணர்ந்து தெளிந்த அப்பெரியர் அறியாமையினாலுமன்று, மறந்து மன்று, பின் எவ்வாறெனில் இவ்விடைக் காலத்து மாதர்களைப் போற்றுதலி லேற்பட்டுள்ள சிரமம் பற்றியே யாமெனக.

இது பொருத்தமன்று, மாதர் தவத்திற்கு இடையூறுதல் பற்றிக் கூறின ரென்பர் ஒரு சிலர். ஒரு சிலர் பெண்கள் ஆடவருக்குத் துன்பந் தருங் குணம் பற்றிக் கூறின ரென்பர். இவ்விதமாகக் கூறும் இவ்விருதிறத்தார் மேலும் எமக்கு வருத்தமில்லை. அவரது கூற்றும் எம்முடைய வபிப்பிராயத்திற்குப் பொருத்தமுடையதே யாகும்.

எவ்வாறென்பதைச் சிறிது ஆராய்வாம்.

முற்காலத்தே தவஞ் செய்யும் முனிவரர்களுக்கு அரசர்கள் தம் பெண்களைத் தந்திருக்கின்றனர். அம்முனிவரர்களுக்கு இப்பெண்களால் தவஞ் சிதைந்ததோ? அப்பெண்கள் அம்முனிவரரின் தவஞ்சிதையாமல் அவர்களுக்கு உதவி செய்து தவப்பயனை அடையும்படிச் செய்யவில்லையா? எந்த முனிவர்கள் மனைவியின்றி யிருந்தார்கள்? எந்தத்தெய்

லம் மனைவியின்றியிருக்கிறது? எந்தப்பெண்ணால் எவர் துன்பப்பட்டார்? பெண்ணால் துன்பப்பட்ட அரசரேனும் முனிவரேனுந் தேவரேனுமுண்டோ? என்றால் என்ன பதில் சொல்வர்? சிலர் சில போலிக்கதைகளைச் சொல்லவருவர் அக்கதையும் அவர்களுக்குப் பிரதிகூலமாயிருக்கும் என்பது சர்வநிட்சயம். ஆனால் இடைக்காலத்தே மாதர்களால் ஆடவருக்குத் துன்பமுண்டானது உண்மையே அதற்குக் காரணம் அக்காலத்து மகமதிய அரசரின் கொடுங்கோன்மையும் பலகொள்ளைக்காரரின் படை எடுப்புமாம். இதனால் பெண்களைக்கைதிகளாக்கி எல்லாவிதத்திலுந் தாழ்த்தி அறிவு விருத்திக்கிடமின்றியாக்கிவிட்டனர். அறிவிற் குறைந்தார் தவறுதல் அதிசயமன்று. அறிவினாலும் தேகவலியினாலும் குறைந்து உலகானுபவங்களை அறியாராகி விவேக சூனியராய் இருக்க நேர்ந்தது. இக்காலத்தும் அநேகமாதர்கள் முன்னைச் சிறப்பினிற்சிறிதுங் குறைவின்றி யிருந்திருக்கின்றனர். அதனைப் பின்னர் எழுதுவோம். இக்காலத்தே பெண்பாலர் ஆண்பாலர்க்குப் பெருஞ்சுமையாயும் இடுக்கண் தருபவராயும் பிறரால் இடுக்கண் உண்டாதற்குக் காரணராயுமிருந்தனராம். இதனாலேதான் புலவர்களும் மற்றையரும் மாதரைக் குறைத்து நினைக்கவும் பேசவும் எழுதவும் கவிகள் புனையவும் நேர்ந்தது. தட்டிக் கேட்பாருமில்லை. இச்சிவப்பிரகாச சுவாமிகளே மாதர்களைப் புகழ்ந்து கூறிய செய்யுள் எத்தனையோ இருக்கின்றது படிப்பவர்கள் அறியாமற் போகார். இங்கு எழுதவேண்டிய விவகாரம் பலவிருந்தாலும் வரிவஞ்சிவிட்டேன். பின்னுஞ் சமயங்கள் நேரும் அப்பொழுது எழுதுவேன்.

•

இது நிற்க, இனிமேற்றான் நாம் எடுத்துப்பேச வந்த நமது நாட்டுப் பெண்மணிகளின் தற்கால நிலைமை என்னும் விஷயம் தொடங்குகின்றது. காருண்யமிகுந்த ஆங்கில அரசரின் காலத்தில் எந்த நிலைமையிலிருக்கிறோம் என்பதை எடுத்துச் சொல்வதென்பது கஷ்டசாத்தியமாம், ஆயினும் ஒருவாறு உவமை முகத்தால் விளக்கிக் காட்டலாம், அஃதெவ்வாறெனில் சிறிதுஞ்சூரியனின் ஒளிபுகாத அறைக்குள் இருட்டில் உழன்று கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த ஒருத்தியைத் திறந்துவிட்டு ஒளியுங் காற்றும் இன்னும் நமக்கு வேண்டுவனவெல்லாம் உள்ள இடத்தில் உலாவவிட்டால் எவ்வண்ணமிருக்குமோ அவ்வண்ணமே இடைக்காலத்தில் பட்ட துன்பங்களினின்றும் வெளிப்பட்டிருக்கின்றோம். இதுவே நமக்கு விடிவு காலம். இந்த இடத்தில் எனது சகோதரிகள் பெண்பாலார் இப்பொழுது இருப்பது நல்ல நிலைமையோ

அல்லது நமது தமிழரசர் காலத்து இருந்த நிலைமை நல்ல நிலைமையோ. என்றும் இந்த இரண்டிலும் எது சிறந்த நிலைமை என்றுங் கேட்க அவசரப்படலாம். அந்தக் கேள்விக்கு விடைகொடுப்பதானால் இந்த வியாசம் பெருகிவிடுமாதலின் விரிவஞ்சிவிடுத்துத் தற்சமயம் இக்காலமே பெண்பாலார்க்கு எக்காலத்திலும் சிறந்ததாய காலம் என்னும் பலருடைய சித்தாந்தத்தை வைத்துக்கொண்டு என் வியாசத்தை மேற்றொடங்குகின்றேன்.

(இன்னும் வரும்.)

அ. சுப்பம்மாள்.

## திரிசிரபுரத்துத் தமிழ்ச் சங்கங்கள்.

### (1) S. P. G. கழகத்து மாணவர் தமிழ்ச்சங்கம்.

இது 1909௵ மார்ச்சு௴ 10உ சிறப்புடன் கூட்டப்பெற்று இரண்டு வருஷங்களாக நடந்து வருகின்றது. இதற்கு ஸ்கூல் தலைமை ஆசிரியர் மகா-ா-ா-ஸ்ரீ S. K. தெய்வசிகாமணி அவர்கள் B. A. L. T. தலைவராக இருந்து விளங்குகின்றார்கள். இதன் முதல் வருஷப் பூர்த்தி உற்சவம் மிக விமரிசையாக 1910௵ பெப்ரவரி மாதம் நடந்தேறியது இரண்டாவது வருஷப்பூர்த்தி 1911௵ பெப்ரவரி மாதம் பத்தாந்தேதியன்று முதல் வருஷப் பூர்த்தியினும் நூறுமடங்கு சிறப்பாக நடத்தப்பெற்றது. அப்பொழுது சங்கத்து அங்கத்தினர்கள் கழகத்து ஆசிரியர்களுக்கும் மற்ற மாணவர்களுக்கும் சிற்றுணவளித்து உபசரித்து உவகையூட்டினர். அன்று எஸ். பி. ஜி. காலேஜ் சரித்திர போதகாசிரியராகிய ஸ்ரீமான் C. R. ஸ்ரீனிவாச ஐயங்காரவர்கள் B. A. சபா நாயகராக வீற்றிருக்க ஸ்ரீமான் T. V. சாமிநாத ஐயரவர்கள் B. A. L. T. "திருவள்ளுவர் சரிதமும்-திருக்குறளும்" என்னும் விஷயத்தைப்பற்றி உபந்நியாசித்தார்கள். அப்போழ்து பிரசங்க இனிமையைச் சபையோர் கேட்டு கரகோஷஞ் செய்து காட்டினர். அக்கிராசனாதிபதியின் வன்மையை எல்லோரும் புகழ்ந்து கொண்டாடினர். சபையின் சிறப்பைப்பாராட்டிக் களிப்புடன் பேசினர். ஐயாயிரஞ் சனங்களுக்கு மேல் உள்ளும் புறமுங்

கூடியிருந்து கேட்டு மகிழ்ந்தனர். அன்று மாலை சங்கத்து அங்கத்தினர்கள் 'தருமசீலன்' என்னும் ஒரு சிறிய நாடகத்தைப் புதிதாக இயற்றி நடித்துக்காட்டி எல்லோரையும் பெருமகிழ்வு கொள்ளச்செய்தனர். இந்நாடகத்தில் அமைந்த திரைகளும் வாத்தியங்களும் பக்கப் பாட்டுகளும் மிகச் சிறந்த நாடகக் கம்பெனிகளிலுங்கூடக் காண்பது அரிது என்று மிகக்கண்டோர் கொண்டாடினர். அன்று விதூஷகன் பாகத்தைக் கொண்டு நடித்த சுப்பிரமணிய ஐயரின் சாமர்த்தியம் கண்டவர்க்கே தெரியும். எவ்வளவு புகழ்ந்து கூறினும் அவர் சாமர்த்தியத்திற்குப் போதாததாகவே இருக்கும். சென்ற இரண்டு வருஷமும் J. M. மாசிலாமணிப்பிள்ளையவர்கள் காரியதரிசியாக இருந்து நடத்தினர். இனி மூன்றாவது வயது இச்சங்கத்திற்குத்தொடங்கியிருக்கிறது கழகந்திறந்த பின்னர் காரியதரிசி முதலிய நியமனம் பெறும். கழகத்து மாணவர் சிரத்தையோடு நடத்தி இதனினும் புகழ்பெறுவரென்று நம்புகின்றோம்.

## (2) ஸ்ரீ சுகந்தகுந்தளாம்பிகை திருவருட் டமிழ்ச்சங்கம்.

இது ஏற்பட்டு சற்றேறக்குறைய பத்துமாதங்களாகின்றன. ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்குத் தொடங்கி 7மணி வரை நடக்கின்றது. ஒவ்வொரு வாரமும் தக்கவர்களே உலோகோபகாரமான விஷயங்களைப்பற்றி உபந்நியாசிக்கின்றார்கள். நாளுக்குநாள் பிறைச்சந்திரன்போல் வளர்ந்துகொண்டே வருகின்றது. ஒவ்வொரு கூட்டத்தும் முன்னூறு பெயருக்குக் குறையாமல் கூடியிருந்து கேட்டானந்தித்துப் பயன்பெறுகின்றார்கள். இச்சங்கத்துத் தலைவராகிய நாட்டாண்மை மகா-ா-ா-ஸ்ரீ M. முத்துசாமிபிள்ளை அவர்களும், காரியதரிசி மகா-ா-ா-ஸ்ரீ S. ஆடியபாதம் பிள்ளை அவர்களும், சங்கத்து ஆலோசனைக்கர்த்தர்கள் மகா-ா-ா-ஸ்ரீ A. சுப்பையாபிள்ளை அவர்களும் மகா-ா-ா-ஸ்ரீ T. அருணாசலம் பிள்ளை அவர்களும் மற்றுஞ் சங்கத்து அங்கத்தினரும் இச்சங்கத்தின் பொருட்டு எடுத்து நடத்தும் முயற்சி மெய்யறிஞர் மெச்சற்பாலதே. வருஷப்பூர்த்தி மகோற்சவத்தை மிக விமரிசையாக நடத்த வேண்டுமென்று ஊக்கத்தோடு வேலைசெய்து வருகின்றார்கள். அன்பர்களும் சங்கத்து அபிமானிகளும் தமிழ் விருப்பினரும் தம்மாற் கூடியமட்டும் உதவி செய்யக் கடன்மைப்பட்டவர்களே.

இஃதன்றி ஸ்ரீ குழுமியானந்தசுவாமிகள் பக்தஜனசபை, ஸ்ரீபழனி யாண்டவர் பக்தஜனசபை, இன்பரசவல்லி தமிழ்ச்சங்கம் முதலியபல சங்கங்களிருக்கின்றன அவைகளைப்பற்றிய விபரங்களை அடுத்த மாதத்தி லெழுதுவேன். **தமிழார்வலன்.**

## புத்தக வரவுகள்.

**ஞானப்பிரகாசம்:**—யாழ்ப்பாணத்திற்பிரசுரமாகும் ஒருமாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. இதன்முதற் புத்தகத்து 9வது இலக்கம் கிடைக்கப் பெற்றேம். நல்ல நடையில் தமிழின் அருமை பெருமை தோன்ற பற்பல சிறந்த விஷயங்களோடு வெளிவந்து உலாவுகின்றது. சில நூல்களுக்கு அரும்பதவுரை முதலியன எழுதப்பட்டு வருதலின் தமிழின்மாட்டு அன்புடையார்க்கு இப்பத்திரிகை மிகப்பயன் தருவதேயாகும். இப்பத்திராதிபரும் விஷயதானஞ் செய்வோரும் கல்வித்தேர்ச்சி முதலியவற்றாற் சிறந்த சீலர்களெனத் தெரிதலால் இப்பத்திரிகை செழித்து வளர்ந்து நிலையுற்று தமிழ் மக்களைக்களிப்பித்து உலகெல்லாம் உலவிவருமென்று உறுதியாய் நம்புகின்றேம். இது குறித்து முழுமுதற் கடவுளையும் வழுத்துகின்றேம்.

**திருவிளையாடற் சதகம்:**—இது முசிரி தாலூக்கா களத்தூரில் வசிக்குஞ் சிறுகனூர் உபாத்தியாயர் மகா-ள-ள-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரால் இயற்றப்பெற்றது. மதுரையில் எம்பெருமானாரியற்றி யருளிய அறுபத்து நான்கு திருவிளையாடல்களையுஞ் சொன்னயம் பொருணயந் துலங்க தமிழின் இனிமை விளங்க நூற்றெட்டு இரட்டை ஆசிரியங்களால் இயற்றி வெளியிட்டிருக்கின்றார். இதனை எமது திரிசிரபுரம் வித்துவான் மகா-ள-ள-ஸ்ரீ கு. சோமசுந்தரப்பிள்ளையவர்கள் பார்வையிட்டிருக்கின்றார்கள். இதுபோலும் புலவர்கள் புதுநூற்கள் வெளிப்படுத்துதலும் தமிழுக்கோர் பேருபகாரமானதேயாம்.

**திரிசிராகிரிப் பதிற்றுப்பத்தந்தாதி:**—இது திரிசிரபுரம் வரகனேரி மகா-ள-ள-ஸ்ரீ சோ. வீரபத்திரபிள்ளை அவர்கள் இயற்றியது. பலபுலவர்கள் அதன் சிறப்பினை எடுத்துக் கூறிச்சாற்றுக்கவிகள் கொடுத்திருக்கின்றனர். பிள்ளையவர்கள் பிரயாசை மெய்யறிவினர் விரும்பத் தக்கதே.

**14—6—11.**

**பத்திராதிபர்.**

## புத்தகங்கள் புதிதாக அச்சிடும் நூலாசிரியர்களுக்கு:—



ஐயன்மீர்! நீங்கள் அச்சிடும் புத்தகங்களை எங்கள் ஆபீசுக்கு கமிஷன் சேலுக்கு அனுப்புவீர்களேயானால் நாங்கள் எம்மாற் கூடியமட்டும் முயற்சிசெய்து புத்தகங்களை விற்றுப் பணமனுப்புவோம்.

புத்தகம் தமிழ்வளர்ச்சி கருதியதாக இருத்தல் வேண்டும். பொது நன்மைக்கு ஏற்றதாகவும் இருத்தல்வேண்டும்.

மானேஜர்,

**செந்தமிழ்ச் செல்வம் அண்டு கோ,**

நெ. 31, வெள்ளை வெற்றிலைக்காரத் தெரு,

திரிசிரபுரம்.

உ

## விளம்பரம்.

---

கவனியுங்கள்! கவனியுங்கள்!! கவனியுங்கள்!!!

தமிழ் விருத்தி கருதி அருமையான தமிழ்ப்புத்தகங்கள் பலவற்றை வருவித்து மற்ற இடங்களில் கிடைக்கும் விலைக்குச் சாசமாகவே விற்பனை செய்கின்றோம். எம்மிடத்து சாஸ்திரங்கள், புராணங்கள், இதிகாசங்கள், காவியங்கள் இன்னுமுள்ள இலக்கண இலக்கிய புத்தகங்களும் மற்றுமுள்ள நவீன நாவல்களையும் விலை சரசமாகப் பெறலாம். சீக்கிரத்தில் எமது புத்தகசாலைக் காட்டலாக்கு வெளிவரும்.

**திருநெல்வேலிப் புராணம்:**—இது ஸ்ரீ நெல்லையப்பக் கவிராயரவர்களால் செய்யுள் ரூபமாக முன்பு அமைக்கப்பெற்ற பெரியதொரு புராணத்தை யாவரும் படித்துணருமாறு, நடைப்படுத்தப் பெற்றது. இப்புராணத்திற் கூறப்படும் சரிதங்கள் மிகப்பலவாதலால், நம்மவர் அப்

பெருநூலைக்கொண்டு அவற்றைத் தெரிந்துகொள்வதினும் எளிதில் இவ்வசனத்தால் அறிந்துகொள்ளலாம். இப்புராணத்தின் நடை இனிமை வாய்ந்தது. ஒவ்வொரு சருக்கத்தும் அதன் கருத்தமைத்துத் ஆதிகவி யொன்றமையப்பெற்றது.

கடவுள் வாழ்த்து பாயிரம் முதலியன புதிதாகவும் கற்பனையோடும் அமைந்துள்ளது. உயர்ந்த காகிதத்தில் சிறந்த எழுத்துக்களால் பதிக்கப்பெற்றிருக்கிறது. நல்ல பயிண்டு 55 பாரம் 440 பக்கம் கொண்டது இரண்டு ரூபாய்க்கு விற்றது. இப்பொழுது 1—8—0 விற்கின்றோம். சொற்ப காப்பிகள்தான் இருக்கின்றன.

எமது ஆபீஸில் ரப்பர் ஸ்டாம்பு, அருமையான பிளாக்குகள், சித்திரப்படங்கள், சாக்பெயின்டிங், லான்ஸ்கேப், காட்சிப்படங்கள், ஆயில் பெயின்டிங் ஐவரி பெயிண்டிங், வாட்டர் கலர் ஒர்க்ஸ், முதலியவைகளும் கண்ணாடிக்கு ரசம் பூசுதல் முதலிய வேலைகளும் உத்தரவனுப்பின் காண்பவர் மதிக்கும்படி மிகச்சொற்ப விலையில் செய்து தருவோம்.

**பசுக்கதையம்மானை:—** இது திரிசிரபுரத்து வரகனேரியில் உபாத்தியாயராயிருந்த வித்துவான் ஸ்ரீமாந் குழந்தைவேலுப்பிள்ளை யவர்களால் இயற்றப்பட்டது. சிவபுண்ணியப் பேற்றையும் பல நீதிகளையும் இனிது விளக்குந் தன்மையுடையது 32 பக்கங்கொண்டது. எமக்கு 1½ அணா ஸ்டாம்பு அனுப்பின் புக்போஸ்டில் அனுப்புவோம்.

**சித்திரமடல்:—** இது காளமேகப் புலவரால் அருளிச்செயப்பெற்றது. ஒரு புதப்பிரபந்தம். வித்துவான் மகா-ள-ள-ஸ்ரீ அழகிய நாத சிவப்பிரகாசம்பிள்ளை அவர்களால் பதிப்பிக்கப்பெற்றது. எமக்கு 2½ அணா ஸ்டாம்பு அனுப்பினால் புக்போஸ்ட்டில் அனுப்புவோம்.

**ஆசார விளக்கம்:—** இது திரிசிரபுரம் வரகனேரி வித்துவான் ஸ்ரீமான் கு. சோமசுந்தரம்பிள்ளை அவர்கள் ஆசாரக்கோவையின் பொருளைத் தெளிவாய்த் தெரியும்படி அகவற்பாவிற் பாடியது எமக்கு 2½ அணா ஸ்டாம்பு அனுப்பினால் புக்போஸ்ட்டில் அனுப்புவோம்.

மானேஜர்,

☞ செந்தமிழ்ச் செல்வம் அண்டு கோ.,
நெ. 31, வெள்ளை வெற்றிலைக்காரத் தெரு,
திரிசிரபுரம்.

# A Valuable asset for Vacancy Seekers.

## The National Type-writing Institution.

**Sanjeevi Row's lane (Near Little Market)**

**Trichinopoly.**

**Imparts instructions in :—**

| | |
|---|---|
| Type-writing | Book-Keeping and |
| Shorthand | Commercial correspondence. |

STUDENTS ARE COACHED UP FOR THE GOVERNMENT AND LONDON EXAMINATIONS.

BY

SPECIALISTS AND PROFESSIONAL MEN HOLDING FIRST CLASS CERTIFICATES.

*Fees:*—Moderate payable by Instalments.

Free admission will be allowed in the case of students who cannot afford to pay their school fees.

*Games:*—Special arrangements are made for games such as Badminton and Foot-Ball.

Scholarships are awarded to students passing their Examinations with distinction.

*Business hours:*—

| | |
|---|---|
| Shorthand and Book-keeping. | 6-30 to 8-30 A. M. |
| Type-writing class. | Through the day. |

| | | |
|---|---|---|
| Mechanism on Yost and Remmington a Speciality. | Pitman's Journal and Library open to all Students. | Jobworks undertaken. Execution neat. |

*For further particulars apply to:—*

**Mr. V. N. Barathy,**

*Manager.*

EXPERTS EMPLOYED ON OUR STAFF.

SUPERIOR PLACE FOR LEARNING.

PERFECT ORDER AND DISCIPLINE MAINTAINED.

## ஆயுள்வேத முறையும் ஐரோப்பிய முறையும் கலந்து செய்த பக்குவங்கள்.

---

Spermatorrhoea specific:— இது ஓர் நூதன மருந்து சொப்பனஸ்கலிதம், தாது கட்டுமானமில்லா திருத்தல் இவைகளுக்கு கைகண்டது. 24 வேளை மருந்தில் குணப்பட்டுவிடும் பத்தியமில்லை ராஜாக்கள் மருந்து. படிக்கும் மாணாக்கர் இதைக கவனிக்கவும்.

ரூ. 2—0—0.

### குழந்தைகளுக்கு.

Health Pills:— (குழந்தைகளுக்கு சுகமாத்திரை) புட்டி அணா 4 மாத்திரம். ஜுரம், ஜன்னி, வலிப்பு, மந்தம், வயற்றுப் பொருமல், சகலத்திற்கும் அருமையானது. நன்றாய் மலவிர்த்தியாகும், வாரம் ஒரு முறை இதைக் குழந்தைகளுக்கு உபயோகித்து வரவேண்டியது. அநேக தலைமுறையாய் அனுபோகமான மருந்து.

### பல்வியாதிகள்.

பல்வியாதி சகலத்திற்கும் எங்கள் குரு பல் பொடிக்கு நிகரானது வேறில்லவேயில்லை என்று திட்டமாய்ச் சொல்லக்கூடும். சகல தந்த நோயும் தீரும். நோய் வராமலும் பாதுகாக்கும் பொடி இது.

புட்டி அணா 4.

☞ எங்கள் மருந்து சாலையில் சகல வியாதிக்கும் கைகண்ட அவுஷதங்கள் இருக்கிறது. எல்லாம் ஆயுள்வேத முறை கலந்த பக்குவங்கள் தான். வியாதிக்கு ஏற்ற மருந்துகள்.

☞ வியாதிகளைபற்றி தெரியப்படுத்தினால் சரியான மருந்துகள் தபால் மூலம் அனுப்புவோம்.

விலாசம்.

டாக்டர் ஏ. மதுரம்.

திருச்சிராப்பள்ளி.

---

பண்டிதர் K. S. கிருஷ்ணசாமி ஐயருடைய 'எலக்டிரிக்பாம்' என்னும் சூலைநிவாரணித்தைலம், இத்தைலத்தை மேலுக்கு தேய்ப்பதினால் வாதரோகம், முழங்கால் வீக்கம், இடுப்புநோய், படிப்பு-பக்கநோய் தலைவலி, ஒற்றைத்தலைவலி, மண்டையிடி, பல்மீர் வீக்கம், தொண்டை கம்மல்-இருமல் மார்சளி-ஜலதோஷம்-இசிவு, சுளுக்கு, தேள்கொட்டு முதலிய விஷக்கடி முதலிய வியாதிகளையும் குழந்தைகளுக்கு காணுகிற மாந்த யிழுப்பு முதலியவைகளையும் அதிசீக்கிரத்தில் சொஸ்தப்படுத்தும் ஓர் சிறந்த தைலம். விலை புட்டி 1-க்கு 0—12—0.

ஏஜண்டுகள், P. கணேசரத்னம்பிள்ளை

கடைத்தெரு 86 நெ. கடை, சேலம் &

சர்மா & கோ,

திருச்சிராப்பள்ளி, தெப்பக்குளம்,

இவ்விடங்களில் விலைக்கு வாங்கிக்கொள்ளலாம்.

## மாச்சாரக் குறிப்பு.

---

### மெக்சிக்கோவில் பூகம்பம்.

அமெரிக்கா கண்டத்திலுள்ள மெக்சிக்கோவில் சென்றவாரத்தில் பூமியதிர்ச்சி உண்டாகி 6 நிமிஷம் பூமியதிர்ந்ததாம். 63 பேர் இறந்தனராம். 75 பேர் வரைக் காயம் பட்டனராம். இருபதினுயிரம் பவுன் வரையிற் பொருட்சேத முண்டாயிற்றாம். பெருங்கட்டடங்கள் பல இடிந்து விழுந்தனவாம். இத்துடன் 'நெருப்போடு காற்றுஞ் சேர்ந்தாற்போல் பூகம்பத்துடன் எரிமலையுஞ் சேர்ந்துவிட்டதாம். கொலீமா வென்னும் எரிமலையானது கற்குழம்பைக் கக்குகிறதாம். ஆயிரக்கணக்கான ஜனங்கள் இருக்க நிழலின்றித் தவிக்கின்றனராம். இந்தப் பூகம்பத்தால் 1300 பேர் மாண்டனர் என்று "நியூயார்க் டைம்ஸ்" பத்திரிகைக்கு மெக்சிக்கோவிலிருந்து தந்தி போயிருக்கிறதாம். பொருட்சேதம் அபாரமென்று சொல்லப்படுகிறது. ஒரு பத்திராதிபர் கூறுகிறார்.

### பத்துரூபாய் நாணயம்.

சக்கிரவர்த்தி நம் இந்தியாவுக்கு விஜயம் செய்வதன் அறிகுறியாக 10 ரூபாய் மதிப்புள்ள பொன்னாணயம் நடைமுறைப் பழக்கத்துக்கு வருமென்று, பொதுவாக நம்பப்படுகிறதாம்,

தரித்திரத்தின் கொடுமை—மாயவரம் டிஸ்டிரிக்டு முனிசிப்கோர்ட்டு ஹெட்கிளார்க்கான ராஜகோபாலய்யர் என்பவர் நாகப்பட்டணம் டிஸ்டிரிக்டு முனிசிப் கோர்ட்டு ஹெட்கிளார்க்காய் மாற்றப்பட்டபோது தன்னுடைய ஸ்தானத்தை வகிக்கிறவரிடம் கணக்குகள் பேப்பர்கள் யாவற்றையும் சரிவர ஒப்புவித்ததுபோல் தன் கையிலிருந்த பணத்தையும் ஒப்புவிக்கவில்லை. பிறகு கணக்கை எடுத்துப் பார்க்கும் பொழுது 199 ரூபாய் 9 அணா மிகுந்திருக்க வேண்டுமெனத் தெரிந்ததாம். உடனே முனிசிப் அவர்கள் இராஜகோபால ஐயரை போலீசார்வசம் ஒப்பித்துவிட்டாராம். இக்கேசை விசாரித்த மாயவரம் டிபுடி மெஜிஸ்டிரேட் அவர்கள் அவருக்கு ஒரு வருஷ கடுந்தண்டனையும் 301 ரூபா அபராதமும் விதித்து மேற்படி ரூபாய் கொடுக்கத் தவறினால் இன்னும் 3 மாதம் கடுங்காவல் தண்டனையும் விதித்து விட்டாராம்.

இதுவும் பட்சியோ?: – கில்பர்ட் என்ற ஆகாய கமனஸ்தர் தமது ஆகாயகமன விமானத்தில் வட்டமிட்டுக் கொண்டிருந்தார். கீழிருந்து பார்ப்பவருக்கு ஆகாயகமனஸ்தர் கருவியோடு கூட ஒரு பட்சி போலத்தான் தென்படுவர் என்பது யாம் நேரிற்பார்த்த விஷயம். இக்கருவியும் ஒரு பட்சிதானோ வெனச் சந்தேகிக்க. ராஜாளி பட்சியானது அவரை வானத்தில் தாக்கியதாம். நல்லவேளையாய் அவர் தம் கைத்துப்பாக்கியினால் அதைப்பார்த்து வெடிதீர்த்து விரட்டினாராம். எவ்விஷயத்திலும் சந்தேகம் குறுக்கிடுவதற்கு இதைவிட வேறென்ன வேண்டும்.